## March 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மாநிலங்களுக்கு வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களை 20 சதவீதம் கூடுதலாக ஒதுக்க மத்திய அரசு அனுமதி அளித்தது. இதன்மூலம், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் ஒதுக்கீடு மொத்தம் 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(i) சமையல் உள்பட பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலியம் எரிவாயுவை (எல்பிஜி) வெளிநாடுகளில் இருந்து இந்தியா (எல்பிஜி தேவையில் 60 சதவீதம்) இறக்குமதி செய்கிறது. அதில் 90 சதவீதம் மேற்காசிய பிராந்தியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அங்கு அமெரிக்கா-இஸ்ரேல் உடனான போர் காரணமாக, ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால், இந்தியாவுக்கு எல்பிஜி கிடைப்பதில் இடர்ப்பாடு ஏற்பட்டது. இதனால் வணிகப் பயன்பாட்டுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில், மத்திய பெட்ரோ லியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

- உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தியை எண்ணெய் நிறுவனங்கள் அதிகரித்துள்ளன. வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விநியோகம் வழக்கம்போல நடைபெறுகிறது. சிலிண்டர் கிடைக்காதோ என்ற அச்சத்தில் நுகர்வோர் முன்பதிவு செய்வது குறைந்துள்ளது. சமையல் எரிவாயு சிலிண்டர்களின் இருப்பு தீர்ந் துவிட்டதாக சிலிண்டர் விநியோக நிறுவனங்களிடம் இருந்து எந்தத் தகவலும் வரவில்லை.
- மாநிலங்களுக்கு வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களை 20 சதவீதம் கூடுதலாக ஒதுக்க மத்திய அரசு அனுமதி அளித்தது. இதன்மூலம், ஏற்கெனவே செய்யப்பட்ட ஒதுக்கீட்டுடன், தற்போது வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் ஒதுக்கீடு மொத்தம் 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ii) உணவகங்கள், ஹோட்டல்களுக்கு முன்னுரிமை:

- தற்போது கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 20 சதவீத வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களை உணவகங்கள், ஹோட்டல்கள், தாபாக்கள், தொழில் நிறுவன உணவுக்கூடங்கள்(கேன்டீன்), உணவு பதப்படுத்துதல் / பால் பண்ணை, மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் நடத்தும் உணவகங்கள், பொது சமையலறைகளுக்கு விநியோகிக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். அத்துடன் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 5 கிலோ எடை கொண்ட சிலிண்டர்களுக்கும் வணிகப் பயன்பாட்டு சமையல் எரிவாயுவை அளிக்க முன்னுரிமை வழங்க வேண்டும்.

(iii) கூடுதல் மண்ணெண்ணெய்:

- அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கூடுதலாக 48,000 கிலோ லிட்டர் மண் ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்களில் எந்தெந்த பகுதிகளில் மண்ணெண் ணெய்யை விநியோகிக்கலாம் என்பதைக் கண்டறியுமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடம் கோரப்பட்டுள்ளது.

(iv) பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்:

- அனைத்துக் குடும்பங்களுக்கும் சமையல் எரிவாயு சிலிண்டர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதுதொடர்பாக அதிகாரபூர்வமாக அளிக்கப்படும் தகவல்களை மட்டுமே மக்கள் சார்ந்திருக்க வேண்டும். வதந்திகளைத் தவிர்க்க வேண்டும்.
- சிலிண்டர் கிடைக்காதோ என்ற அச்சத்தில் யாரும் முன்பதிவு செய்ய வேண்டாம். எண்ம (டிஜிட்டல்) வழியில்முன் பதிவை மேற்கொள்ள வேண்டும்.
- சிலிண்டர் கிடைக் காதோ என்ற அச்சத்தில் முன்பதிவு செய்வது குறைந்தாலும், ஆங்காங்கே சிலிண்டர் விநியோக நிறுவனங்களில் பொதுமக்கள் கூடும் தகவல் வெளியாகிறது. அந்த

நிறுவனங்களில் திரண்டு யாரும் வரிசையில் காத்திருக்க வேண்டாம். வீட்டுக்கே நேரடியாக சிலிண்டர் விநியோகம் செய்யப்படும். அதுவரை காத்திருக்கவும். குழாய் வழியாக விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு, மின்சார அடுப்பை பொதுமக்கள் பயன்படுத்தி, தினசரி பயன்பாட்டில் எரிவாயுவை சேமிக்கும் வழக்கத்தைப் பின்பற்றலாம்.

- முக்கிய நகரங்கள் மற்றும் நகர்ப்புற பகுதியில் வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் நுகர்வோரை, குழாய் வழியாக விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயுவின் பயன்பாட்டுக்கு மாறுமாறு கோரப்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் போதிய அளவு கையிருப்பு உள்ளது என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. நாட்டின் வங்கி அமைப்பில் பணப்புழக்கத்தைச் சீர்செய்ய ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான ஒரே நாள் 'மாறுப்டும் ரெப்போ வட்டி விகித (விஆர்ஆர்)' ஏலத்தை மீண்டும் நடத்தப்போவதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது.

(i) தற்போதைய நிலவரப்படி, வங்கிகளிடம் சுமார் ரூ.16,875.36 கோடி கூடுதல் பணம் புழக்கத்தில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், நடப்பு நிதியாண்டு மார்ச் மாதம் முடிவடைய உள்ளதால், வங்கிகளின் குறுகியகால பணத்தேவை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும். இதனைச் சமாளித்து, சந்தையில் பணப் புழக்கம் இருப்பதை உறுதிப்படுத்த ரிசர்வ் வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ii) முன்னதாக, கடந்த ஆம் தேதியன்று 7 நாள்கள் விஆர்ஆர் ஏலம் மூலம் ரூ.48,014 கோடியும், கடந்த வெள்ளிக்கிழமையன்று 3 நாள்கள் விஆர்ஆர் ஏலம் மூலம் ரூ.25,101 கோடியும் வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) மேலும், நடப்பாண்டின் தொடக்கம் முதல் அரசுப் பத்திரங்களை வெளிச்சந்தையில் வாங்கும் (ஓஎம்ஓ) முறை மூலம், இதுவரை சுமார் ரூ.3.50 லட்சம் கோடி மதிப்பிலான நிரந்தர பணப்புழக் கத்தை ரிசர்வ் வங்கி உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

3. ஈரான் போர் சூழல் காரணமாக நாடுகள் மாற்று ஆதாரங்களைத் தேர்ந்தெடுத்திருப்பதால், பனாமா கால்வாய் தனது முழுத் திறனுடன் பரபரப்பாக இயங்கி வருகிறது.

4. கியூபாவின் அரசியல் அமைப்பு அல்லது அதிபரின் பதவிக்காலம் குறித்து அமெரிக்காவுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தப்பட மாட்டாது' என்று கியூபா அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

(i) கியூப அதிபர் மிகெல் டீயாஸ் கானெலை பதவியிலிருந்து நீக்க அமெரிக்கா முயற்சி செய்து வருவதாகத் தகவல்கள் வெளியான நிலையில், அதற்கு கியூபா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

(ii) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் விதித்தகடும் பொருளாதாரத் தடைகள் மற்றும் எரிபொருள் விநியோகத் தடையால் கியூபா தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. இந்த இக்கட்டான சூழலைப் பயன்படுத்தி, கியூபா மீதான தடைகளை நீக்க வேண்டுமானால், அதிபர் டீயாஸ் மிகெல் கானெலைப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(iii) முன்பு, வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மடுரோவை நீக்கிவிட்டு, தங்களுக்குச் சாதகமான ஒரு ஆட்சியை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்தது போலவே, இப்போது கியூபாவிலும் அதே உத்தியை அமெரிக்கா கையாளுவதாக அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

5. கர்நாடக மாநிலம் துமாகூருவில் முதன்முறையாக சர்வதேச ஐடிஎஃப் மகளிர் 35 உலக டென்னிஸ் டூர் போட்டி நடைபெறவுள்ளது. வரும் மே மாதம் 4 முதல் 10 வரை இப்போட்டி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

6. மத்திய ஆயுதக் காவல் படை (சிஏபிஎஃப்) அதிகாரிகளின் நியமனம், மாற்றுப் பணி (டெபுடேஷன்), பதவி உயர்வு மற்றும் பணிகள் சார்ந்த பிற நிபந்தனைகளை ஒழுங்குமுறைப்படுத்த வகை செய்யும்

ஒருங்கிணைந்த சட்ட மசோதாவை மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிமுகம் செய்யவுள்ளார்.

(i) இந்த சட்ட மசோதாவின்படி, ஐ.ஜி. நிலையில் 50 சதவீத பணியிடங்களில் இந்திய காவல் பணி (ஐபிஎஸ்) அதிகாரிகளை நியமிக்க முன் மொழியப்பட்டுள்ளது.

(ii) நாட்டில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை(சிஆர்பிஎஃப்), எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்), இந்திய-திபெத் எல்லைக் காவல் படை (ஐடிபிபி), மத்திய தொழிலக பாது காப்புப் படை (சிஐஎஸ்எஃப்) சஷஸ்திர சீமா பல் (எஸ்எஸ்பி) உள்ளிட்ட மத்திய ஆயுதக் காவல் - படைகள் அனைத்தும் தத்தமது சட்டங்களின்கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த சட்ட விதிகள், சிஏபிஎஃப் குரூப் ஏ பொதுப் பணி அதிகாரிகள், பிற அதிகாரிகள் மற்றும் படையினரின் நியமனம்-பணி நிபந்தனைகளை நிர்வகிக்கின்றன.

(iii) இந்நிலையில், மத்திய ஆயுதக் காவல் படைகளில் குரூப் ஏ பொதுப் பணி அதிகாரிகள் மற்றும் பிற அதிகாரிகளின் நியமனம். மாற்றுப் பணி, பதவி உயர்வு மற்றும் பணிகள் சார்ந்த பிற நிபந்தனைகளை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்கில் மத்திய ஆயுதக் காவல் படைகள் (பொது நிர்வாகம்) சட்ட மசோதா-2026 எனும் ஒருங்கிணைந்த சட்ட மசோதா, மாநிலங்க எங்வையில் திங்கள்கிழமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

(iv) மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஐ.ஜி. நிலையில் 50 சதவீத பணியிடங்கள், கூடுதல் தலைமை இயக்குநர் (ஏடிஜி) அளவில் 67 சதவீத பணியிடங்களில் ஐபிஎஸ் அதிகாரிகளை மாற்றுப் பணி அடிப்படையில் நியமிக்க புதிய சட்ட மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளது.

(v) சிறப்பு தலைமை இயக்குநர் மற்றும் தலைமை இயக்குநர் அந்தஸ்திலான பணியிடங்களுக்கு மாற்றுப் பணி அடிப்படையில் மட்டுமே நியமனம் 'மேற்கொள்ளும் அம்சமும் கொண்ட இந்த சட்ட மசோதாவை மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிமுகம் செய்யவுள்ளார்.

(vi) உச்சநீதிமன்ற உத்தரவும், அர சின் எதிர்வினையும்..:

- முன்னதாக, மத்திய ஆயுதக் காவல் படைகளின் அதிகாரிகள் அளவில் ஐபிஎஸ் அதிகாரிகளின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, கேடர் அதிகாரிகளின் பதவி உயர்வை அதிகரிக்க உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரிய மத்திய அரசின் மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.
- இந்தச் சூழலில், மாநிலங்களவையில் மேற்கண்ட சட்ட மசோதா கொண்டுவரப்படவுள்ளது. இந்த மசோதாவின் அம்சங்கள், உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை நீர்த்துப் போக செய்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.
- அதேநேரம், 'மத்திய ஆயுதக் காவல் படைகளில் ஐபிஎஸ் அதிகாரிகள் நெடுங்காலமாகவே ஒருங்கிணைந்த-முக்கியமான அங்கமாக உள்ளனர். மாற்றுப் பணி வாயிலாக, இந்தப் படைகளின் பிற அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து செயல்படுகின்றனர். இந்தப் படைகளின் திறன்மிக்க செயல்பாட்டை உறுதி செய்வதில் மத்திய-மாநில அரசுகள் இடையே நெருக்கமான ஒருங்கிணைப்பு அவசியம். அதற்கு ஐபிஎஸ் அதிகாரிகள் மாற்றுப் பணி முறையில் நியமிக்கப்படும் தற்போதைய நடைமுறை தொடர வேண்டும்' என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த மசோதா முன்னெடுப்புக்காக, மத்திய உள்துறை செயலருக்கு எதிராக முன்னாள் சிஏபிஎஃப் அதிதாரிகள் சிலர் உச்சநீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்துள்ளனர்.

7. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 'தாராகிரி' ஸ்டெல்த் ரக போர்க்கப்பல் இந்திய கடற்படையில் ஏப்.3-ஆம் தேதி இணைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(i) இதற்காக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ii) இதுகுறித்து அவர்கள் மேலும் கூறுகையில், 'நீலகிரி வகையின் (திட்டம் 17ஏ) நான்காவது போர்க் கப்பலான தாராகிரி (யார்டு 12653) கடந்த ஆண்டு நவம்பர் 28-ஆம் தேதி கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. மும்பையில் உள்ள மசகான் டாக் கப்பல் கட்டுமான நிறுவனத்தால் (எம்டிஎல்) கட்டமைக்கப்பட்ட மூன்றாவது போர்க் கப்பலான தாராகிரி 6,670 டன் எடையுடையது.

(iii) நமது நாட்டின் பொறியியல் திறன்களின் முழு வெளிப்பாடாகவும், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் சிறந்த உதாரணமாகவும் இந்தப் போர்க் கப்பல் திகழ்கிறது.

(iv) எளிதில் கண்டறிய முடியாத வடிவமைப்பு (ஸ்டெல்த்), தாக்கும் திறன், தாமாக இயங்கும் ஆற்றல் என நவீன தொழில்நுட்பங்களுடன் அதிவேகம், பன்முக கடற்சார் செயல்பாடுகள் என தற்சார்பு இந்தியாவின் சின்னமாக தாராகிரி விளங்கிறது.

(v) பல்வேறு ஏவுகணைகள்:

- இந்தப் போர்க் கப்பலில் தரையில் இருந்து தரை இலக்குகளைத் தாக்கும் சூப்பர்சோனிக் ஏவுகணைகள், தரையில் இருந்து வான் இலக்குகளைத் தாக்கும் நடுத்தர ஏவுகணைகள் மற்றும் சிறப்பு நீர்மூழ்கி எதிர்ப்பு அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.
- உலகத்தரத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள தாராகிரி போர்க் கப்பல் இந்திய கடற்படையில் ஏப்ரல் 3-ஆம் தேதி இணைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்' என்றனர்.

8. மேற்காசிய போர் காரணமாக உலகளாவிய எரிசக்தி சந்தையில் நிச்சயமற்ற சூழல் நிலவிவரும் சூழலில், இந்தியா தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக 100 கோடி டன் நிலக்கரியை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. இதுகுறித்து மத்திய நிலக்கரி அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

(i) நிலக்கரி துறை சார்ந்த அனைவரின் ஒருங்கிணைந்த நீடித்த முயற்சிகள் காரணமாக கடந்த 20-ஆம் தேதி நாடு தொடர்ந்து இரண்டாம் ஆணடாக 100 கோடி டன் நிலக்கரி உற்பத்தி இலக்கை எட்டி சாதனை படைத்துள்ளது.

(ii) வலுவான திட்டமிடல், திமையான செயல்பாடு, நெருங்கிய ஒத்துழைப்பை இது வெளிப்படுத்துவதோடு, தேசத்தின் பொருளாதார வளர்ச் சிக்கும் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றுகிறது.

(iii) இவ்வாறு நிலக்கரி அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவது, நாட்டில் அதிகரித்துவரும் எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்ய உதவுவதோடு, அனல் மின் நிலையங்களில் சாதனை அளவில் நிலக்கரி இருப்பைப் பராமரிக்கவும் உதவுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

9.சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

(i) மத்திய கலாசாரத் துறையின் கீழ் செயல்படும் இலக்கிய அமைப்பான சாகித்திய அகாதெமி ஆண்டுதோறும் 24 மொழிகளில் வெளிவரும் கவிதை, சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் உள்ளிட்ட படைப்புகளில் சிறந்ததாக ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதன் படைப்பாளிக்கு இந்த விருதை வழங்கி வருகிறது.

(ii) 2025-ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழிக்கான சாகித்திய அகாதெமி விருது எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனின் 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' என்கிற இலக்கிய விமர்சன நூலுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவரும் தமிழ்ச் சிறு கதைகளின் பரிமாணங்களை ஆய்வு செய்து பதிவு செய்திருக்கிறார் தமிழ்ச் செல்வன். கதைகளின் போக்கை விவரிப்பதுடன், அந்தக் கதை எழுதப்பட்ட காலகட்டத்தின் அரசியல், கலாசாரத் தாக்கம், சமூக மாற்றங்கள் உள்ளிட்டவை எவ்வாறு அந்த சிறுகதைகளில் பிரதி பலித்தன என்பதையும் அந்த நூலில் பதிவு செய்திருக்கிறார் அவர்.

(iii) வெயிலோடு போய், வாளின் தனிமை, மிதமான காற்றும் இசைவான கடலலையும் உள்ளிட்ட 25-

க்கும் அதிகமான சிறுகதைத் தொகுப்புகள் உள்ளிட்ட படைப்புகளுக்குச் சொந்தக் காரர் தமிழ்ச்செல்வன். பழம்பெரும் நாடகக் கலைஞரும், பாடலாசிரியருமான மதுரகவி பாஸ்கரதாஸ் இவரது தாய் வழித் தாத்தா. சிறுகதை எழுத்தாளரான தமிழ்ச்செல்வனுக்கு, ஆய்வு நூலுக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது